மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் வைகாசி மாதம் 30-ம் நாள்
2023-ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் நாள் செவ்வாய் கிழமை

**IA 2/2023 /in/ OS 88 /2023**
(Original Suit CNR No. TNTH06 000 252 2023)

1. P. நந்தகோபால்
2. N. சிவக்குமார்
3. கவிராஜ்
4. நந்தகுமார்
5. N. மல்லையன்

:: மனுதார்கள் / வாதிகள்

**/எதிர்/**

1. சுமதி
2. இந்திரா
3. பரமேஸ்வரன்
4. இளங்கோவன்
5. சுபாசினி
6. பிரதாப்

:: எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள்

------

இம்மனுவானது 21-03-2023-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. அழகர்ராஜா, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. குருவராஜ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

வழக்கு விசாரணை முடியும் வரை மனுதார்கள் / வாதிகள் மனு A மற்றும் B ஷெட்யூல் சொத்துக்களுக்கு மனு C ஷெட்யூல் சொத்தின் வழியாக சென்று

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:32:49 +0530

வருவதற்கு எதிர்மனுதார்களோ, அவர்களது வகையாட்களோ, ஏஜென்டுகளோ எவ்வித தடையோ, இடையூறோ செய்யக்கூடாது என்றும், மனு C ஷெட்யூல் சொத்தை எதிர்மனுதார்கள் எவ்வித சேதமும் செய்யக்கூடாது என்றும் இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் வழங்கக் கோரி மனுதார் / வாதியால் O39 R1 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் / வாதி தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்:

1–ம் மனுதார் 2 மற்றும் 5–ம் மனுதார்களின் தகப்பனார் ஆவார். 2–ம் மனுதார், 3, 4 மனுதார்களின் தகப்பனார் ஆவார். 1–ம் மனுதார் , இதர மனுதார்களுக்கும் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனு A மற்றும் B ஷெட்யூல் சொத்துக்கள் மனுதார்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். C ஷெட்யூலில் கண்டுள்ள சொத்தானது மனுதார்களுக்கும், 1, 2, 5–ம் எதிர்மனுதார்களுக்கும் பாத்தியப்பட்ட பொது வண்டிப்பாதை ஆகும். மனுச் சொத்துக்கள் மற்றும் அதனுடன் சேர்ந்த சில் சொத்துக்களைப் பொறுத்து கடந்த 06–05–2019–ம் தேதி மனுதாரரும், 2–ம் எதிர்மனுதாரரும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் A ஷெட்யூல் சொத்துக்கள் மனுதாரருக்கும், B ஷெட்யூல் சொத்துக்கள் 2–ம் எதிர்மனுதாரருக்கும் ஒதுக்கப்பட்டு, C ஷெட்யூல் சொத்தான பொது வண்டிப்பாதை அமைத்து அவரவர் பாக நிலத்திற்கு சென்று வந்துள்ளனர். இந்நிலையில் மனுதார் அவருக்குப் பாத்தியமான A ஷெட்யூல் சொத்தினைப் பொறுத்து 2 முதல் 4 மனுதார்களுக்கு 09–03–2022–ம் தேதி தான செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார். B ஷெட்யூலில் கண்ட சொத்தினைப் பொறுத்து 5–ம் மனுதாரருக்கு கடந்த 09–03–2022–ம் தேதி தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். இந்நிலையில் 2–ம் எதிர்மனுதார் அவருக்குப் பாத்தியமான நிலத்தை ஒட்டிய மனுதாரருக்குப் பாத்தியமான நிலத்தின் ஒரு பகுதியை கிரையம் கொடுக்குமாறு கேட்டார். அதற்கு மனுதார் மறுத்தன் காரணமாக C ஷெட்யூல் சொத்தான பொது வண்டிப்பாதையில் மனுதார் செல்லக்கூடாது என்று மறித்து பிரச்சனை செய்துள்ளனர். இந்நிலையில் 2–ம் எதிர்மனுதார் அவருக்குப் பாத்தியமான சொத்தினை அதாவது மனு C

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:32:59 +0530

ஷெட்யூல் சொத்திற்கு கிழக்குப் பக்கமுள்ள சர்வே எண்.504/10A1–ல் கண்ட சொத்தினைப் பொறுத்து 18–01–2023–ம் தேதி 1–ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்தும், அதே தேதியில் 2–ம் எதிர்மனுதார் அவருடைய மகளான 5–ம் எதிர்மனுதாரருக்கு சர்வே எண்.504/3–ல் கட்டுப்பட்ட நிலத்தை கிரையம் கொடுத்துவிட்டார். இவ்வாறாக மேற்படி ஆவணப் பத்திரங்களின் அடிப்படையில் மனுதார்களும், எதிர்மனுதார்களும் மனு C ஷெட்யூல் சொத்தை சொத்தை பொது வண்டிப்பாதையாக அடைந்து அனுபவித்து வருகின்றோம். இந்நிலையில் எதிர்மனுதார்கள் கடந்த 01–03–2023–ம் தேதி இனிமேல் C ஷெட்யூல் சொத்தான பொது வண்டிப்பாதை வழியாக செல்லக்கூடாது என்று கூறினார்கள். மேலும் C ஷெட்யூல் சொத்தான பொது வண்டிப்பாதையை அழிக்கப்போவதாக கூறி பொக்லைன் வ்ணடி மூலம் மண்ணைத் தோண்டி சேதப்படுத்த முயன்றதை மனுதார்கள் அமைதியான முறையில் தடுத்துவிட்டனர். மனு A மற்றும் B ஷெட்யூல் சொத்துக்களுக்கு சென்றுவர C ஷெட்யூல் சொத்தான பொது வண்டிப்பாதையை தவிர வேறு பாதை இல்லை. எனவே, வழக்கு விசாரணை முடியும் வரை மனுதார்கள் / வாதிகள் மனு A மற்றும் B ஷெட்யூல் சொத்துக்களுக்கு மனு C ஷெட்யூல் சொத்தின் வழியாக சென்று வருவதற்கு எதிர்மனுதார்களோ, அவர்களது வகையாட்களோ, ஏஜென்டுகளோ எவ்வித தடையோ, இடையூறோ செய்யக்கூடாது என்றும், மனு C ஷெட்யூல் சொத்தை எதிர்மனுதார்கள் எவ்வித சேதமும் செய்யக்கூடாது என்றும் இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் வழங்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்.</u>

மனுச் சங்கதிகள் மறுக்கப்படுகிறது. மனுதார்களும், எதிர்மனுதாரர்களும் தங்களுக்கிடையே பாதை தொடர்பாக எந்த ஆவணமும் ஏற்படுத்திக்கொள்ளாத நிலையில் அதன் அளவுகள் குறித்து பாகப்பிரிவினை பத்திரத்தில் எதுவும் சொல்லப்படாத நிலையில் மனுதார் / வாதிகள் அவர்களாகவே கிழமேல் 16 அடி என்றும், தென்வடல் 350 அடி என்றும் அளவுகளை குறிப்பிட்டு அதனை C ஷெட்யூல் சொத்து என்று எதிர்மனுதாரர்களின் சொத்தை அபகரிக்கும்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:33:08 +0530

எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மனுதார்கள் குறிப்பிட்டுள்ளவாறு சொத்து விபரம் ஸ்தலத்தில் இல்லை. பாகப்பிரிவனை செய்தவுடன் 2–ம் எதிர்மனுதாரரால் சர்வே எண்.504/10A1–ல் கட்டுப்பட்டுள்ள நிலத்தின் மையத்தில் பாதை அமைத்து கொடுத்துள்ளார். அந்த பாதை மட்டுமே தற்போதும் ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது. 1–ம் மனுதாரரும், 2–ம் எதிர்மனுதாரரும் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் A ஷெட்யூல் 2–ம் இலக்கச் சொத்து 1–ம் மனுதாரருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தின் நான்குமாலில் கிழக்கும் வடக்கும் B ஷெட்யூல் 2–ம் எதிர்மனுதார் இந்திரா நிலம் என்றும், மேற்கு சர்வே எண்.504/9A2 நம்பர் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அது 2–ம் எதிர்மனுதாரரின் கிரைய சொத்து ஆகும். தெற்கில் சர்வே எண்.504/10B நம்பரில் போடப்பட்டுள்ள கிழமேல் மெயின்ரோடு என குறிப்பிடப்பட்டுள்ளது. 1–ம் மனுதாரரும், 2–ம் எதிர்மனுதாரரும் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரப்படி இருவரின் நிலங்களுக்கும் செல்லக்கூடிய பொதுப்பாதை தாவா நிலங்களுக்கு தெற்கில் சர்வே எண்.504/10B நம்பரில் போடப்பட்டுள்ள கிழமேல் மெயின் ரோட்டிலிருந்து தொடங்கி தென்வடலாக செல்ல வேண்டும். ஆனால் சர்வே எண்.504/9A2 நம்பர் நிலத்திற்கு கிழக்கிலும் சர்வே எண்.504/10B நிலத்திற்கு வடக்கிலும் 1–ம் மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட சர்வே எண்.504/10A2 நம்பர் நிலம் உள்ளது. வாதிகள் குறிப்பிடும் C ஷெட்யூல் சொ'த்து பாகப்பிரிவினை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு முரணாக சர்வே எண்.504/10B நம்பரில் போடப்பட்டுள்ள கிழமேல் மெயின் ரோட்டிலிருந்து தொடங்காமல் அதற்கு அடுத்துள்ள மனுதாரர்களின் நிலமான சர்வே எண்.504/10A2 நம்பர் நிலத்திலிருந்து தொடங்குவதாக குறிப்பிட்டு தோராய வரைபடம் தாக்கல் செய்துள்ளனர். 2–ம் எதிர்மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட B ஷெட்யூல் நிலமான சர்வே எண்.504/10A1 நம்பர் நிலத்தின் மையத்தில் தென்வடலாக பாதை அமைக்கப்பட்டது. அந்த பாதை வழியாகதான் 1–ம் மனுதார் தனது சொத்துக்களுக்கும், 2–ம் எதிர்மனுதார் தனது தனிப்பட்ட கிரைய சொத்தான சர்வே எண்.504/3A2 மற்றும் சர்வே எண்.504/3B நம்பர் நிலங்களுக்கு சென்று வருகிறார்கள். மேற்கண்ட பாதையை மறைத்துவிட்டு பாதையாக இல்லாததும், 2–ம் எதிர்மனுதாரருக்கு தற்போது 1–ம் எதிர்மனுதாரரின் பயன்பாட்டில் உள்ள ஆழ்துளை கிணறு,

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:33:18 +0530

மாட்டுக்கொட்டகை , படப்படி நிலம் மற்றும் மாட்டுக்கொட்டகையில் இருந்து சேகரிக்கப்படும் கழிவுகளை சேகரித்து வைக்கும் இடத்தை பாதையாக குறிப்பிட்டு ஸ்தலத்தில் இல்லாத ஒன்றை பாதையாக காட்டி தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீமானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

5) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. சான்றாவணங்கள் இல்லை.

6) <u>பிரச்னைக்கான தீர்வு:</u>

மனுதார் தனது மனுவில் கூறியுள்ள சங்கதிகளின் படி வழக்குரை A மற்றும் B ஷெட்யூல் சொத்துக்கள் வாதிகளுக்குப் பாத்தியப்பட்டது என்றும், தாவா C ஷெட்யூல் சொத்து மனுதார்கள் / வாதிகளுக்கும், 1, 2, 5 எதிர்மனுதார்கள் / 1, 2, 5 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது வண்டிப்பாதை என்றும், மேற்படி சொத்துக்கள் முன்பாக ஆத்தியப்பன் மற்றும் மனோகரன் ஆகியோர்களுக்கு பாத்தியமாக இருந்ததை , பிராது சொத்துக்களையும், அதனுடன் சேர்ந்த சில சொத்துக்களையும், 1-ம் வாதியும் 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து கூட்டாக 21-02-2000-ம் தேதியில் பதிவு கிரையம் பெற்று அனுபவித்து வந்த நிலையில், மேற்படி கிரைய சொத்துக்களை 06-05-2019-ம் தேதி தங்களுக்குள் பதிவு பாக பிரிவினை செய்து கொண்டதாகவும், அதன் படி பாகப்பத்திரத்தில் கண்ட A ஷெட்யூல் சொத்துக்கள் 1-ம் மனுதார் / 1-ம் வாதிக்கும், B ஷெட்யூல் சொத்துக்கள் 2-ம் எதிர்மனுதாரருக்கும் ஒதுக்கப்பட்டு இருவரின் நிலங்களுக்கும் செல்வதற்கு 1-ம் மனுதாரரும், 2-ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து பங்கிட்டு இடம் போட்டு சர்வே எண்.504/10B நிலத்தில் தெற்கு கடைசியில் பொது வண்டிப்பாதை அமைக்க மேற்படி பாக பிரிவினை பத்திரத்தின் படி ஆவணம் ஏற்படுத்திக் கொண்டதாகவும், அதன் அடிப்படையில் 1-ம் மனுதாரரும், 2-ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து அமைத்துக் கொண்ட பொது வண்டிப்பாதைதான் தாவா C ஷெட்யூல் வண்டிப்பாதை என்றும் மனுதார்கள் /வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:33:27 +0530

7) மேற்படி பாதையை மனுதார்கள் பிராது சொத்துக்களுடன் சேர்த்து பொதுவாக வைத்து அனுபவம் செய்து வரும் நிலையில், மனுதார்களுக்குப் பாத்தியப்பட்ட சில சொத்துக்களை எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் கிரையம் கேட்டதாகவும், அதற்கு மனுதார்கள் / வாதிகள் மறுப்பு தெரிவித்ததால் , வாதிகள் மீது வீண் விரோதம் கொண்டு பிரதிவாதிகள் தாவா C ஷெட்யூல் பாதையை மனுதார்கள் / வாதிகள் பயன்படுத்துவதை தடை இடர் செய்வதாகவும், அதன் காரணமாக பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் தொடர்ந்து தாவா C ஷெட்யூல் பாதையை மனுதார்கள் / வாதிகள் தொடர்ந்து அனுபவம் செய்வதை எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதால் வழக்கு முடியும் வரை பிரதிவாதிகளுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து ஆரம்பத்தில் 1-ம் வாதி மற்றும் 2-ம் பிரதிவாதியால் கூட்டாக கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்பதும், அதனை 1-ம் வாதியும், 2-ம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை செய்து கொண்ட விபரத்தையும் , மேற்படி பாக பிரிவினை பத்திரத்தில் இருவரின் நிலங்களுக்கும் சென்று வர பாதை அமைக்கப்பட வேண்டிய ஷரத்துக்கள் கண்டுள்ளதையும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால், அதே வேளையில் பிராதில் கூறியுள்ள படி C ஷெட்யூல் சொத்தாக காட்டப்பட்டுள்ள ஒரு அமைப்பில் ஒரு பாதை ஸ்தலத்தில் இல்லை என்றும், மாறாக , 2-ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். 504/10A1 நிலத்தின் மையத்தில் தென்வடலாக ஒரு பொதுப் பாதை அமைத்துக் கொடுத்துள்ளார் என்றும், பாகப்பிரிவினைப் பத்திரத்தில் கண்ட ஷரத்துக்களின் படி அமைக்கப்பட்ட மேற்படி சர்வே எண்.504/10A1 நிலத்தின் மையத்தில் கண்ட தென் வடல் பொது பாதைதான் தற்போது வரை வாதிகள் மற்றும் பிரதிவாதிகளால் தங்கள் நிலங்களுக்கு செல்லக்கூடிய பாதையாக பயன்படுத்தப்பட்டு

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:33:36 +0530

வருவதாகவும் , வாதிகள் கூறிய படி சர்வே எண்.504/10B நிலத்தில் ஆரம்பித்து தெற்கு நோக்கி ஒரு பாதை அமைப்பு இல்லை என்றும், அவ்வாறு C ஷெட்யூல் சொத்தாக வாதிகள் கூறியுள்ள பகுதியில் பிரதிவாதிகள் தங்கள் கால் நடை கழிவுகளை கொட்டியும், படப்படி அமைத்தும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், வாதிகள் தங்கள் நிலத்திற்கு தனியாக ஒரு பாதையை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் பொய்யான விபரங்களுடன் இல்லாத ஒரு பாதை அமைப்பை காட்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே வாதிகள் கூறுவது போன்று ஒரு பாதை அமைப்பு ஸ்தலத்தில் இல்லாத நிலையில் வாதிகள் கோரியபடி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கத்தக்க முதற்தோற்ற வழக்கு வாதிகளுக்குச் சாதகமாக இல்லை என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யத்தக்கதாக உள்ளது என்றும் வாதிடப்பட்டுள்ளது.

9) இரு தரப்பு வாதம் பரிசீலனை செய்யப்பட்டதில் , இரு தரப்பிலும் தாவா C ஷெட்யூல் சொத்தாக காட்டப்பட்டுள்ள பாதை அமைந்துள்ள பகுதியில் 1–ம் வாதியும், 2–ம் பிரதிவாதியும் சேர்ந்து கூட்டாக கிரையம் பெறப்பட்ட நிலங்கள், பின்னர் 1–ம் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியால் பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு பாகப்பிரிவினை செய்த பின்னர் அவரவர் நிலங்களுக்கு சென்று விவசாயம் செய்வதற்கு இருவரும் சேர்ந்து இடம் போட்டு பொதுவாக பாதை அமைத்துக் கொள்ள வேண்டிய ஷரத்துக்கள் கண்டுள்ளது என்பது இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பேரில் அமைக்கப்பட்டதுதான் தாவா C ஷெட்யூல் பாதை என்றும், அந்த பாதையை தவிர வாதிகளின் நிலத்திற்கு செல்வதற்கு வேறு பாதை எதுவும் இல்லை என்றும், இந்த சூழ்நிலையில், பிரதிவாதிகள் , வாதிகள் மீது ஏற்பட்ட விரோதம் காரணமாக தாவா C ஷெட்யூல் பாதையை வாதிகள் பயன்படுத்துவதை தடை இடர் செய்வதால் வாதிகள் தங்கள் நிலத்திற்கு விவசாய இடுபொருட்களை கொண்டு செல்லவும், விவசாய பணிகளை செய்ய இயலாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:33:53 +0530

10) அதற்கு மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் , வாதிகள் கூறுவது போல் C ஷெட்யூல் பாதை என்ற ஒரு அமைப்பு ஸ்தலத்தில் இல்லை என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தங்கள் நிலத்திற்கு செல்வதற்கு ஏதுவாக பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட ஷரத்துக்களின் படி பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட சர்வே எண்.504/10A1 நிலத்தின் மையத்தில் ஒரு பாதை பிரதிவாதிகளால் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதை வாதிகளும் தற்போதும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், தாவா C ஷெட்யூல் பாதையை தவிர வாதிகள் நிலத்திற்குச் செல்ல வேறு பாதை இல்லை என்பதாக வாதிகள் கூறியுள்ள விபரம் வழக்கிற்காக உருவாக்கப்பட்ட சங்கதி என்றும் கூறப்பட்டுள்ளது,

11) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் படி , வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தின் அடிப்படையில் தாவா C ஷெட்யூல் பாதையானது தாவா நிலங்களின் தெற்குப் பகுதியில் உள்ள சர்வே எண்.504/10B–ல் அமைந்துள்ள கிழமேல் மெயின் பாதையில் இருந்து சர்வே எண்.504/10A2–ல் ஆரம்பித்து தெற்கு நோக்கி C ஷெட்யூல் பாதையாக அமைக்கப்பட்டு , பிராது A மற்றும் B ஷெட்யூல் சொத்துக்களில் சென்று சேருவதாக பாதை அமைக்கப்பட்டுள்ளதாக வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

12) அவ்வாறுள்ள பாதை அமைப்பை காட்டும் வகையிலும், மேற்படி பாதையை வாதிகள் பயன்படுத்துவதை இடையூறு செய்யும் விதமாக பிரதிவாதிகள் பொக்லைன் இயந்திரம் கொண்டு குழி தோண்டி மறைப்பை ஏற்படுத்தியதை காட்டும் விதமாக மனுதார்கள் / வாதிகள் தரப்பில் புகைப்படங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி புகைப்படத்தை பரிசீலனை செய்ததில் தாவா C ஷெட்யூல் பாதையாக காட்டப்பட்டுள்ளது போன்ற பாதை அமைப்பு ஸ்தலத்தில் இல்லை என்று பிரதிவாதிகள் கூறும் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும், தாவா C ஷெட்யூல் பாதை போன்ற அமைப்புள்ள பகுதியானது பிரதிவாதிகள் தங்கள் கால் நடை கழிவுகளை கொட்டுவதற்கும், படப்படி அமைத்து பயன்படுத்தி வரக்கூடிய நிலம் என்றும்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:34:01 +0530

கூறியுள்ள சங்கதி மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படங்களுக்கு முற்றிலும் விரோதமானதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13)** மேலும், எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படங்களில் சர்வே எண்.504/10A1 நிலத்தில் தெற்கு நோக்கி செல்லக்கூடிய பாதை அமைப்பு இருப்பதாகவும், அந்த பாதையில் சென்று வாதிகளும், பிரதிவாதிகளும் தங்கள் நிலத்தை பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் கூறியுள்ள போதிலும், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களில் கண்டுள்ள பாதை அமைப்பானது மனுதார்கள் / வாதிகளின் நிலத்திற்கு செல்லும் வகையில் அமைந்துள்ளது என்பதை நிரூபிக்கும் விதமாகவும் , மேற்படி பாதையை தற்போதும் வாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை நிரூபிக்கும் விதமாகவும் முழுமையான சாட்சிய விசாரணை செய்யப்பட வேண்டியது சட்டப்படி அவசியமானதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** மனுதார்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிர்மனுதார்கள் கூறும் சர்வே எண்.504/10A1 நிலத்தில் மையத்தில் அமைந்துள்ள தெற்கு நோக்கிய பாதையில் , வாதிகள் நிலத்திற்கு செல்லும் வகையில் அமைப்பு இல்லை என்றும், தாவா C ஷெட்யூல் பாதையை தவிர வேறு பாதை வழியாக வாதிகளின் நிலத்திற்கு செல்ல இயலாத நிலை உள்ளது என்று கூறியுள்ளதையும், பிரதிவாதிகள் கூறுவது போல் சர்வே எண்.504/10A1 நிலத்தின் மையத்தில் உள்ள தெற்கு நோக்கிய பாதை அமைப்பு பாகப்பிரிவினை பத்திரத்தில் 1—ம் வாதிக்கும், 2—ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஷரத்துக்களின் படி அமைக்கப்பட்டதுதானா ? என்பது பற்றியும் , மேற்படி பாதையின் மூலமாக வாதிகளின் நிலத்திற்கு செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதா ? என்பது பற்றியும் இரு தரப்பு சாட்சிய விசாரணை மூலமாக தீர்வு காணப்பட வேண்டிய நிலையில் தற்போதுள்ள சூழ்நிலையில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களின் அடிப்படையில் தாவா C

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:34:11 +0530

ஷெட்யூல் பாதை அமைக்கப்பட்டுள்ளது என்பதும், அதை பயன்படுத்த இயலாத வகையில் பொக்லைன் இயந்திரம் மூலம் குழி தோண்டி பிரதிவாதிகள் மறைப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்பதும் தெரிய வருகிற காரணத்தினால் வாதிகளின் வழக்குரைச் சங்கதிகளின் படி வாதிகள் கோரிய பரிகாரம் வழங்கத்தக்க முதற்தோற்ற வழக்கு வாதிகளுக்குச் சாதகமாகவே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15)** பிரதிவாதிகளின் நிலமானது தெற்குப் பக்கம் உள்ள சர்வே எண்.504/10B–ல் கிழ மேலாக அமைந்துள்ள பாதையுடன் சேர்ந்து அமைந்துள்ள நிலையில் , பிரதிவாதிகள் தாவா C ஷெட்யூல் பாதையை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை இல்லை என்றும், ஆனால் வாதிகள், தாவா C ஷெட்யூல் பாதையை பயன்படுத்த இயலாத நிலை ஏற்படும் பட்சத்தில் வாதிகள் தங்கள் நிலத்திற்கு விவசாய இடுபொருட்களை எடுத்துச் செல்ல இயலாத நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளதாகவும் முதற்தோற்றத்தில் தெரிய வருவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வழக்கின் சமச்சீர் நிலை, வாதிகளுக்கு சாதகமாகவே உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16)** எனவே, வழக்கு முடியும் வரை தாவா C ஷெட்யூல் பாதையை மனுதார்கள் / வாதிகள் பயன்படுத்துவதை தடை இடர் செய்யாதிருக்கும் வகையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படாத பட்சத்தில் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகளைக் காட்டிலும் மனுதார்கள் / வாதிகளுக்கே கூடுதலாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையில் வாதிகள் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதார்கள் / வாதிகளுக்கு வழங்கப்பட வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமானதாக உள்ளது என்று முடிவு செய்து மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:34:19 +0530

**17)** இறுதியாக,

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 2/2023 அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.<br><br>வழக்கு விசாரணை முடியும் வரை மனுதார்கள் / வாதிகள் மனு A மற்றும் B ஷெட்யூல் சொத்துக்களுக்கு மனு C ஷெட்யூல் சொத்தின் வழியாக சென்று வருவதற்கு எதிர்மனுதார்களோ, அவர்களது வகையாட்களோ, ஏஜென்டுகளோ எவ்வித தடையோ, இடையூறோ செய்யக்கூடாது என்றும், மனு C ஷெட்யூல் சொத்தை எதிர்மனுதார்கள் எவ்வித சேதமும் செய்யக்கூடாது என்றும் இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரி வடிவில் எடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 13-06-2023-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.13 15:34:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

I.A.2/2023
in
O.S. 88/2023
FAIR / DRAFT ORDER
Date : 13-06-2023